# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014

## வணிகக்கல்வியும் கணக்கீடும்

| தரம்:- 10 | சுட்டெண்:- | நேரம்:- 2 மணி 30 நிமிடம் |
|---|---|---|

பகுதி - I

➢ **பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

01. வணிகப் படிமுறை வளர்ச்சி யுகத்தினை காலப்பிரிவு ஒழுங்கில் சரியாக காட்டும் தொகுதியினை பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி தெரிவு செய்க.

A பணத்தின் பாவனை
B பண்டமாற்று
C இலத்திரனியல் வணிகம்
D கைத்தொழில்புரட்சி

1) ABC மற்றும் D
2) BAD மற்றும் C
3) BCD மற்றும் A
4) ADB மற்றும் C
( )

02. தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்து கொள்வதற்காக பண்டங்களையும் சேவைகளையும் தாமாகவே உருவாக்கி கொள்ளும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்?

1) முதல் உற்பத்திகள் 2) நேரில் உற்பத்திகள்
3) சிற்றளவு உற்பத்திகள் 4) நேர் உற்பத்திகள்
( )

03. மின் (இலத்திரனியல்) வணிகம் (e-commerce) விருத்தியடைவதில் செல்வாக்கு செலுத்தும் பிரதானமான ஒரு காரணியாக கருதக்கூடியது எது?

1) கணினி 2) கைத்தொழில்புரட்சி
3) மின் (இலத்திரனியல்) பணம் 4) இணையம்
( )

04. யார், என்ன, எப்பொழுது, எங்கே, ஏன் என்பவற்றை உள்ளடக்கிய வணிக கட்டமைப்புடன் தொடர்புடையது.

1) வணிகத்தின் நடத்தை 2) நுகர்வோர் நடத்தை
3) அரசாங்க நடத்தை 4) சர்வதேச நடத்தை
( )

05. பொருளாதாரச் சூழற் காரணிகளாக அமைவன.

1) வங்கி வீதம், விலைமட்டம், சர்வதேச உறவுகள்
2) வங்கி வீதம், பணவீக்க வீதம், சனத்தொகை
3) வங்கி வீதம், விலைமட்டம், விழுமியங்கள்
4) வங்கி வீதம், விலைமட்டம், திறந்த பொருளாதாரக் கொள்கை
( )

06. உரிமையின் பிரகாரம் வணிகத்தின் பிரதான வகைப்படுத்தலை சரியாக எடுத்துக் காட்டுவது.

1) முதனிலை, இரண்டாம் நிலை
2) சிற்றளவு, பேரளவு
3) தனியுடைமை, பங்குடைமை
4) தனியார்துறை, பொதுத்துறை
( )

07. பின்வரும் கூற்றுக்களிலிருந்து சரியான கூற்றினை தெரிவு செய்க.

1) குறுக்கு கோடிட்ட காசோலை ஒன்றிற்கு வங்கி கருமபீடத்தில் பணத்தை பெறமுடியும்
2) காசோலையை வழங்குபவரால் மட்டுமே காசோலை ஒன்றுக்கு குறுக்கு கோடிட முடியும்
3) காசோலையினால் கொடுப்பனவு ஒன்றை செய்வதற்கு வங்கி நடைமுறை கணக்கு ஒன்று அவசியமில்லை
4) வணிக வங்கி ஒன்றே எப்பொழுதும் காசோலை ஒன்றின் வரைவுணி ஆகும்
( )

08. ஆயுள் காப்புறுதிக்கு பொருத்தமற்ற தத்துவம்

1) உரிமைத் தத்துவம் 2) உச்ச நம்பிக்கைத் தத்துவம்
3) இழப்பீட்டுத் தத்துவம் 4) அண்மைக் காரண தத்துவம்
( )



kalvi.lk

09. உற்பத்தியில் அல்லது சேவைக் காலங்களில் ஈடுபடும் வணிகமொன்றை ஆரம்பித்து செயற்படுத்த ஒரு நபரோ அல்லது ஒரு குழுவினரோ ஒழுங்கமைப்பாக செயற்படல்.

1) விநியோகம் 2) உற்பத்தி

3) வணிக அமைப்பு 4) வணிக சந்தர்ப்பம் ( )

10. போக்குவரத்து முறைமையொன்றின் முதன்மையான அம்சங்களாவன. பாதை, ஊடகம், வலு மற்றும்

1) முடிவிடம் ஆகும் 2) கிரயம் ஆகும்

3) கதி ஆகும் 4) கொள்ளளவு ஆகும் ( )

11. வைப்புக்களை ஏற்காத வங்கி

1) தேசிய சேமிப்பு வங்கி 2) நிதிக் கம்பனி

3) கிராமிய வங்கி 4) வியாபார வங்கி ( )

12. முகாமைச் செயன்முறையின் கூறுகளை காட்டும் சரியான தொகுதியாக காணப்படுவது.

1) திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், தலைமை வகித்தல், கட்டுப்படுத்தல்

2) திட்டமிடுதல், வினைத்திறன், தலைமை வகித்தல், கட்டுப்படுத்தல்

3) திட்டமிடுதல், பயனுறுதி, தலைமை வகித்தல், கட்டுப்படுத்தல்

4) திட்டமிடுதல், வினைத்திறன், பயனுறுதி, கட்டுப்படுத்தல் ( )

13. தொடர்பாடல் என்பது ஒரு செயன்முறையாகும். அச்செயன்முறையில் அடங்கும் ஒரு முக்கிய அம்சம்

1) கதி 2) கிரயம் 3) துலங்கல் 4) செம்மை ( )

14. பின்வருவனவற்றுள் சட்ட ஆளுமையை கொண்டுள்ள அமைப்பு / அமைப்புக்கள்

1) தனிவியாபாரம், பங்குடமை 2) வரையறுத்த பொதுக்கம்பனி, பங்குடைமை

3) வரையறுத்த பொதுக்கம்பனி 4) பங்குடைமை, கூட்டுத்தாபனம் ( )

15. சாந்தன் தனது தொழிற்சாலையை தீ அபாயக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்துள்ளார். அத்தொழிற்சாலையில் வெடி பொருட்கள் காணப்பட்ட போதிலும் காப்புறுதிப் பத்திரத்தில் அது பற்றி குறிப்பிடப்படவில்லை தொழிற்சாலையினுள் தீ விபத்து ஏற்பட்டு சேதங்கள் ஏற்பட்ட போது காப்புறுதி நிறுவனம் நட்டஈடு செலுத்த மறுத்தது. இதற்கு காரணமாக அமைந்த காப்புறுதி கோட்பாடு யாது?

1) காப்புறுதி உரித்து 2) உச்ச நம்பிக்கை

3) இழப்பீடு 4) கிட்டடிய காரணம் ( )

16. சந்தைப்படுத்தல் திட்டத்தில் மட்டும் உள்ளடங்கக்கூடிய உருப்படிகளை தெரிவு செய்க.

1) எதிர்பார்க்கப்படும் மூலப்பொருட்கிரயம்

2) எதிர்பார்க்கப்படும் விற்பனைகள்

3) மதிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்கள்

4) எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அலகொன்றின் பெறுமானம் ( )

17) உற்பத்தி பொது மேந்தலைக் கிரயத்தை காட்டும் சரியான கூற்றினை தெரிவு செய்க.

1) மூலக்கிரயம், நேரில் உழைப்புக் கிரயம்

2) நேரில் பொருள் கிரயம், நேர் உழைப்பு கிரயம், நேரில் ஏனைய செலவுகள்

3) நேரில் உழைப்புக் கிரயம், நேர் உழைப்பு கிரயம், மூலக்கிரயம்

4) நேரில் பொருள் கிரயம், நேரில் உழைப்புக் கிரயம், நேரில் ஏனைய செலவுகள் ( )

18) பணத்தின் சட்ட அங்கீகாரம் எனும் கருத்து தரும் கூற்று.

1) போலிகளை உருவாக்க முடியாமை

2) சிறு அலகுகளாக பிரிக்கமுடியாமை

3) பெறுமானத்தின் அளவு கோலாக காணப்படல்

4) இலகுவில் இனங்காண கூடியதாயிருத்தல் ( )

19) விநியோகச் செயன்முறையில்இடைநடுவர் அல்லாதவர்.

1) நுகர்வோர் 2) மொத்த வியாபாரி

3) சில்லறை வியாபாரி 4) முகவர் ( )

20) வணிக நிறுவனம் ஒன்றிற்கு தேவையான வணிகத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் போது ஆரம்ப மூலதன மதிப்பீடானது உள்ளடக்கப்பட வேண்டியது.

1) சந்தைப்படுத்தல் திட்டத்தில் ஆகும்

2) செயற்பாட்டு திட்டத்தில் ஆகும்

3) மனத வளத் திட்டத்தில் ஆகும்

4) நிதித் திட்டத்தில் ஆகும் ( )

(20 x 01 = 20 புள்ளிகள்)



kalvi.lk

# பகுதி II

* **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1) கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வினா இலக்கம் (I) தொடக்கம் (V) வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.

"ஆரம்ப காலத்தில் மனிதன் தனது சூழலிருந்தே தமக்கு தேவையானவற்றை பெற்று கொண்டான். பின்னர் தனக்கு தேவையானவற்றை தானே உற்பத்தி செய்து கொண்டான். காலப்போக்கில் தம்மால் சிறப்பாக உற்பத்தி செய்யக் கூடியவற்றை மட்டுமே உற்பத்தி செய்தான். பொருட்களை பரிமாற்றி தத்தமது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. காலப்போக்கில் மாற்றூடகமாக பணம் புழக்கத்திற்கு வந்ததும் பல யுகங்கள் தோன்றின. இன்று அவைவிட மற்ற வியாபாரத்தில் மனித தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன."

(I) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி வேறுபடுத்துக.
(II) தேவைகள், விருப்பங்கள் வேறுபடுத்துக.
(III) பொருட்கள், சேவைகள் வேறுபடுத்துக.
(IV) தொழில் பிரிப்பு, சிறப்பு தேர்ச்சி வேறுபடுத்துக.
(V) அகச்சூழல், புறச்சூழல் வேறுபடுத்துக.

(20 புள்ளிகள்)

2)
(I) இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி உற்பத்தியின் வகைகள் யாவை?
(II) வணிகத் திட்டத்தினுள் உள்ளடங்கும் திட்டங்கள் யாவை?
(III) தனியார்துறை நிறுவனங்களின் இடம்பெறும் நான்கு நிறுவனங்கள் தருக.
(IV) கூட்டுறவின் பண்புகளைத் தருக.
(V) வணிகத் துணைச் சேவைகளினுள் இடம்பெறுவன யாவை?

(20 புள்ளிகள்)

3)
(I) காசோலையொன்றில் புறக்குறிப்பிடுதல் என்பதனால் கருதப்படுவது யாது?
(II) தன்னியக்க ரெலர் அட்டையில் காணப்படும் நான்கு அடிப்படை அம்சங்கள் தருக.
(III) வரவு அட்டை, செலவு அட்டை தொழிற்பாட்டிற்கு இடை நடுவராக வணிக வங்கிகள் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் இரு அட்டைகளையும் வேறுபடுத்துக.
(IV) அமைவிடமற்ற வியாபாரம் என்றால் என்ன?
(V) வங்கிகளுக்கிடையிலான வலையமைப்பு என்றால் என்ன?

(20 புள்ளிகள்)

4)
(I) விநியோக முறைகளைத் தருக.
(II) வணிகத்தை பதிவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.
(III) பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகள் நான்கு தருக.
(IV) வணிகம், வியாபாரம் வேறுபடுத்துக.
(V) வணிக வங்கிகளில் காணப்படக்கூடிய வைப்புக்கள் யாவை?

(20 புள்ளிகள்)

5)
(I) வணிக நடவடிக்கைளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவம் நான்கு தருக.
(II) வணிகமொன்று போக்குவரத்து சேவையினால் பெற்று கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கு தருக.
(III) வணிகர் ஒருவர் களஞ்சியப்படுத்தலினால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கு தருக.
(IV) காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதனால் வணிகர் ஒருவர் அடையக்கூடிய அனுகூலங்கள் நான்கு தருக.
(V) திட்டமிடலில் மனித வளத் திட்டமிடல் என்றால் என்ன?

(20 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457